கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை – 2017
மட்டக்களப்பு

-----------------------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்

--------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

----------------------------------------

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம;

---------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

-----------------------------------------

நிதிகூற்றுக்கள் மீளாய்வாண்டில் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதன் மூலம் ரூபா 575,700 அறவிட வேண்டியிருந்தும் இத் தொகைகள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆண்டு தொடக்கம் 2009 வரை அறவிட வேண்டிய முத்திரைத் தீர்வைகள் ரூபா 747,717 பெறவேண்டியிருந்தும் இத் தொகைகள் நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் சபை உத்தியோகத்தர்களின் ஊழியர் கடன் பட்டியலின் பிரகாரம் ரூபா 2,193,814 மீதியாக காட்டப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றில் ரூபா 2,534,402 மீதியாகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

1.3.3 பெறவேண்டியவைகள்

2013 ஆம் ஆண்டில் இருந்து வேலையை விட்டுச் சென்ற ஒருவரிடம் இருந்து அறவிடப்படாமல் உள்ள கடன் நிலுவை ரூபா 148,490 நிலுவையாகக் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணிகள், கட்டிடங்கள் | 87,251,495 | காணி உறுதி நிலையான சொத்து பதிவேடு |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 13,088,075 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 2,216,219 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| மீளளிக்கக்கூடியவைகள் | 5,403,280 | விரிவான அட்டவணைகள் |
| முற்பணக்கொடுப்பனவுகள் | 3,516,372 | விரிவான அட்டவணைகள் |

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை இரண்டு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| நி.பி. இல. 1645 மற்றும் 1646 | வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2017 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானங்களிலும் கூடிய செலவினம் ரூபா 1,777,967 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 927,396 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,705,363 வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான JCB இயந்திரத்தை வாடகைக்கு கொடுத்ததினால் அவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 49,000 அறவிடப்படாமல் 2018 ஆம் ஆண்டில் நிலுவையாக காணப்படுகின்றது.

(ஆ) 2016ம் ஆண்டு ஒப்பந்தம் எதுவும் செய்யப்படாது Vibrating Roller இயந்திரத்தை வாடகைக்கு கொடுத்ததினால் அறவிட வேண்டிய தொகை ரூபா 226,800 அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.2 வீதவரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றிற்கு வீதவரிகள் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------

3.1 செயலாற்றுகை

------------------

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

-------------------------------------------

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

----------------------------------------

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் புள்ளிவிபரவியல் பட்டியலின்படி கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள வாகரை அரச வைத்திய சாலையில் 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் பிறந்த பிள்ளைகள் முறையே 77 மற்றும் 81 ஆக இருந்ததுடன் இவர்களில் நிறை குறைந்து பிறந்த பிள்ளைகளின் பிறப்பானது முறையே 17 மற்றும் 16 ஆக காணப்பட்டிருந்தும் தாய் சேய் நலன்புரி சேவைகளுக்காக 2016 மற்றம் 2017 ஆண்டுகளில் ரூபா 75,000 மற்றும் ரூபா 50,000 ஒதுக்கப்பட்டிருந்தும், சபையினால் தாய் சேய் நலன் மற்றும் சௌபாக்கியத்திற்காக செலவு செய்யப்பட்டிருக்கவில்லை.

3.3 மனிதவள முகாமைத்துவம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 நொவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், தற்காலிக/ அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நிதி ஒதுக்கீட்டிற்கான அங்கீகாரமும் பெறப்பட்ட பின்னரே ஊழியர்கள் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய போதிலும், இதற்கு முரணாக முன் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்படாது 2016 இல் 14 ஊழியர்களும் 2017 இல் 04 ஊழியர்களுமாக மொத்தம் 18 ஊழியர்கள் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) 2011 பெப்ரவரி 24 ஆம் திகதி 02/2011 இலக்க ஓய்வூதிய திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைய/ தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுகின்ற ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களிடமிருந்து 8% பங்களிப்பும் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்தின் பங்களிப்பான 12% சதவீதம் சேர்த்து அரச சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். எனினும், மேற்படி ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட 12 ஊழியர்களுக்கு அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை
-------------------------------------
சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 19 மயானங்களின் உரித்தை முறையாக கையேற்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 சச்சரவுத் தன்மையான கொடுப்பனவு
-------------------------------------------
பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டில் சபையின் தென்னைத் தோட்டத்திற்கு தற்காலிக கூடாரம் அமைப்பதற்காக ரூபா 219,375 கொடுக்கப்பட்டிருந்தது. கள ஆய்வின் போது செய்து முடிக்கப்பட்ட வேலைக்கான பெறுமதி ரூபா 163,164 ஆக இருந்த போதிலும் ரூபா 219,375 ஒப்பந்தகாரருக்கு கொடுக்கப்பட்டிருந்ததினால் ரூபா 56,211 மேலதிகமாக கொடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் சபை அலுவலக கட்டிடத்தில் மரத்தால் போடப்பட்டிருந்த கதவுகளை கழற்றி ஏழு புதிய அலுமினியக் கதவுகள் பொருத்தப்பட்டமைக்கு ரூபா 173,740 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கள ஆய்வின் பிரகாரம் செய்து முடிக்கப்பட்ட வேலைக்கான மதிப்பீடு ரூபா 114,288 காணப்பட்ட போதிலும் ரூபா 173,740 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன்படி ரூபா 59,452 மேலதிகமாக கொடுக்கப்பட்டிருந்தது.

3.6 ஒப்பந்த நிர்வாகம்
-----------------------
பாதைகளுக்கு கிறவல் இடல்
-----------------------------------
நிதி ஆணைக் குழுவின் 2016/01 ஆம் இலக்க 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய சுற்றிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதன நிதியின் கீழ் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளூராட்சி அதிகார சபை வீதிகளை அமைக்கும் போது கிறவல் இடுதலை தவிர்த்து அதிக காலம் பயன்படுத்தக்கூடிய வகையில் கார்பட் இடுதல், தார் பூசுதல் அல்லது கொங்கிறீட் இடுதலை மேற்கொள்ள வேண்டும் என கூறப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணான வகையில் மீளாய்வாண்டில் சபையினால் நான்கு வீதிகளுக்கு ரூபா 870,000 செலவில் கிறவல் இடப்பட்டிருந்தது.

4 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்
--------------------------------------------------
கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| ----------------- | -------------------------------------------------- |
| (அ) கணக்கீடு | பெற வேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும் கணக்கிற்கு கொண்டுவரப்படுதல் வேண்டும். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) மனிதவள முகாமைத்துவம் | சபைக்கு ஊழியர்களை சேர்த்துக் கொள்ளும் போது முகாமைத்துவத் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெற்ற பின்பே ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

.